## தலைப்பு 270 – அம்பாறை மாவட்டச் செயலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 270 - அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு | செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை | இவ்வறிக்கையின் பந்தியுடன் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (இ) | அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் படி உத்தியோகத்தர்கள் 08 பேரிடம் 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் காலவீச்சில் இருந்து நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,546,553 தொகையினை அறவீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை | 2.5 (அ)(ii) |
| 1.6.1 (ஊ) | மாவட்ட செயலகத்திற்குரிய 16 அரச வீடுகளில் வதிவோரிடம் ரூபா 355,782 இற்கான நிலுவை வாடகை அறவீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை. | 2.5 (அ)(i) |
| 3.2 (அ) | மாவட்ட செயலகத்துக்குரிய வாகனம் ஒன்று கடந்த 21 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அதன் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு அல்லது திருப்பிப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை. | 3.5 (அ) |

| | | |
|---|---|---|
| 3.2 (இ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக்ஙகளினால் 2019 ஆண்டு முதல் களஞ்சிய தொடர் கட்டிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த 43 மோட்டார் சைக்கிள்களை பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு வழங்கப்பட்டிருந்த பரிந்துரை. | 3.5 (ஆ) |
| 3.2 (ஈ) | மீளாய்வாண்டு இறுதியளவிலும் தெஹியத்த கண்டிய, பதியதலாவ, மஹஓய, தமன, அட்டாலச்சேனை மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை. | 1.6.1 (அ)(V) |
| 3.3 | அம்பாறை மாவட்ட செயலகத்திற்குரிய சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் 2015 செப்தம்பர் 21 திகதி கள்வர்களினால் உடைக்கப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் ரூபா 850,738 தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த பரிந்துரை. | 3.6 |
| 4 | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், உச்சமட்ட சேவைக் காலம் ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்கள் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றம் வழங்கும் படி வழங்கப்பட்டிருந்த பரிந்துரை. | 5 (இ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திரண்ட நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் (SA82) உள்ளடங்கிய நிதி அல்லாத சொத்துக்களில் முன்னைய ஆண்டு இறுதியில் காட்டப்பட்டிருந்த மீதி ரூபா 3,423,420,683 தொகை எனினும், மீளாய்வாண்டு ஆரம்பத் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 3,418,509,244 தொகையென காட்டப்பட்டிருந்த காரணத்தினால் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி இடையே ரூபா 4,911,439 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங் கண்டிருப்பதுடன், அந்த மீதிகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிடையே வித்தியாசத்திற்கான காரணமாகவது WEB INTERFACE முறைமையில் திறைசேரியினால் தரவுகள் உட்புகுத்தும் போது ஏற்பட்டிருந்த சிக்கல் ஒன்றின் காரணமாக என அறிவிக்கின்றேன். | நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு ஆரம்ப திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் கணக்குகள் பொழிப்பு அறிக்கையில் (SA80) இரண்டு சொத்து விடயங்கள் தொடர்பாக மீதி ரூபா 1,884,053,167 தொகை எனினும், திரண்ட நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கு அறிக்கையில் (SA82) அந்த இரண்டு சொத்து விடயங்கள் தொடர்பான மீதி ரூபா 1,879,141,727 தொகையாகும். அதன்படி, நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி இரண்டு அறிக்கைகளிலும் இரண்டு பெறுமதிகள் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங் கண்டிருப்பதுடன், அந்த மீதிகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிடையே வித்தியாசத்திற்கான காரணமாகவது WEB INTERFACE முறைமையில் திறைசேரியினால் தரவுகள் உட்புகுத்தும் போது ஏற்பட்டிருந்த சிக்கல் ஒன்றின் காரணமாக என அறிவிக்கின்றேன். | நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிச் செயலாற்றல் கூற்றின் படி, மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்கள் தனதாக்களின் பெறுமதி ரூபா 27,942,223 தொகை எனினும், திறைசேரிப் பதிவின் படி (திரண்ட நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கு அறிக்கை - SA82) அது ரூபா 26,208,493 தொகையாக காட்டப்பட்டமையால் ரூபா 1,733,730 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங் கண்டிருப்பதுடன், அந்த மீதிகளின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளிடையே வித்தியாசத்திற்கான காரணமாகவது WEB INTERFACE முறைமையில் திறைசேரியினால் தரவுகள் உட்புகுத்தும் போது ஏற்பட்டிருந்த சிக்கல் ஒன்றின் காரணமாக என அறிவிக்கின்றேன். | நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான மகளிர் அபிவிருத்தி நிலையம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிலையத்துக்கு சொந்தமான காணிகள், கட்டிடங்கள் மற்றும் பொருட் பதிவேட்டுப் பண்டங்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொண்டு குறிப்பிட்ட பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கின்றேன். | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான சொத்துக்களை இனங் கண்டு அவற்றை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | தமன, அட்டாளச்சேவை, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான காணிகளும், பதியதலாவ மற்றும் தமன ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களுக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் மற்றும் அரசாங்க வீடுகளை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் காட்டுவது தொடர்பாக அறிவுறுத்தல், பிரதேச செயலாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான சொத்துக்களை இனங் கண்டு அவற்றை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்ட பதினைந்து பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி ரூபா 46,422,256 தொகைகளை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த ஆண்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான சொத்துக்களை இனங் கண்டு அவற்றை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமத்துடன் கலந்துரையாடல் செயற்திட்டத்தின் கீழ் 12 பிரதேச செயலக பிரிவுகளில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களில் 658 செயற்திட்டங்களுக்காக ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த திறைசேரியினால் கட்டுநிதிகள் வழங்கப்படாமையால் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட ரூபா 112,295,000 இற்கான ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு முடியாமல் போயிருந்தது. | கட்டுநிதி கிடைக்கப்படாமையால் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் போனமையால், ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு முடியாமல் போனதென அறிவிப்பதுடன், கட்டுநிதிகள் உரிய முறையில் கிடைத்திருந்தால் ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்தக் கூடியதாக இருந்திருக்கும் என அறிவிக்கின்றேன். | கட்டுநிதிகளை முறையான முகாமைத்துவம் மேற்கொண்டு உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்து மீண்டுவரும் செலவு விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான ஏற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சரியாக முன்வரக்கூடிய செலவுகளுக்காக எதிர்வுகூறி பாதீடு தயாரித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் கடந்த 04 வருடங்களில் கவனம் செலுத்திய போது செலவு விடய இலக்கம் 270-1-0-2401 இன் கீழ் 30 சதவீதத்தை விட கூடிய தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கப்படும் போது அதனை கவனத்தில் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அடுத்த வருடத்திற்கான பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது இதனை கவனத்தில் எடுத்து மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | பாதீடு தயாரிக்கும் போது முன்னைய ஆண்டு தொடர்பாகவும் கவனம் செலுத்தி சரியாக முன்வரும் செலவுகளை எதிர்வுகூறி பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) விவசாய அமைச்சு** | | |
| விவசாய அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட சுற்றாடல் நேய உர கொள்கையின் கீழ் 2022/23 பெரும் போகத்திற்காக அம்பாறை மாவட்டத்தின் விவசாயிகளுக்கு சேதனப் பசளை வழங்குவதற்காக ரூபா 1,485,711,118 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி, அம்பாறை மாவட்டச் செயலாளரின் தலைமைத்துவத்தை உர துணைக் குழுவொன்றின் தீர்மானத்தின் படி அம்பாறை மாவட்ட தேசிய உர செயலகம் மற்றும் கமநல சேவை மாவட்ட அலுவலகம் ஒன்றிணைந்து அம்பாறை மாவட்ட செயலகத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 893,415,900 இற்கான செலவொன்று மேற்கொண்டு 29 கமநல சேவை நிலையங்களின் விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்காக சேதனப் பசளை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் படி பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்காத ரூபா 8,577,405 இற்கான பெறுமதியுடைய சேதனப் பசளை இருப்பு மூன்று கமநன சேவை நிலையங்களில் களஞ்சியங்களிலும் மூன்று கமநல சேவை நிலையங்களை சேர்ந்த விவசாய அமைப்புக் களஞ்சியங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது . விவசாயிகளுடன் | (i), (ii) சுற்றாடல் நேய சேதன உரம் வழங்கும் செயற்திட்டம் நேரடியாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக செயற்படுத்தப்பட்டமையால் உங்களது அவதானிப்புக்கள் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக எனது இலக்கம் FIN/CONT/AU.QUR/FC01/01 மற்றும் 2023.05.23 திகதிய கடிதத்தின் மூலம் கமநல அபிவருத்தி உதவி ஆணையாளரிடம் அழைக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட விபரங்கள் கிடைத்தவுடன் உங்களுக்கு அறிவிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். | செலவிடப்பட்ட அரச செலவுகளுக்கு ஏற்றவாறு வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அதற்காக உரிய வழிகாட்டலின் படி செயற்பட வேண்டும். |

மேற்கொள்ளப்பட்ட நேர்முகக் கலந்துரையாடல்களின் போது அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்களின் படி விவசாயிகளினால் இந்த உரம் பயன்படுத்த விருப்பமின்மையும் சரியான காலப் பகுதியில் உரம் கிடைக்கப் பெறாமையும், வழங்கியிருந்த உரம் உரிய நியமத்தில் காணப்படாமை ஆகிய விடயங்கள் இவ்வாறு உரம் மீதியாவதற்கு காரணமாக இருந்தெதன அவதானிக்கப்பட்டது.

(ii) விவசாய அமைச்சினால் வழங்கியிருந்த சுற்றாடல் நேய உர வினியோகம் 2022/23 பெரும் போகம் - வழிகாட்டலின் பிரிவு 3.8 இன் படி 2022 சிறு போகத்தில் மீதியாகக் காணப்படும் சேதனப் பசளையை விவசாய அமைச்சின் விசேட அங்கீகாரத்தின் கீழ் 2022/ 23 பெரும் போகத்திற்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட முடியுமாக இருந்த போதிலும் 02 கமநல சேவை நிலையங்களில் அவ்வாறு 2022 சிறு போகத்தில் மீதியாக இருந்த ரூபா 68,686,000 தொகை பெறுமதியான சேதனப் பசளை இருப்பு 2022/23 பெரும் போகத்தின் சேதனப் பசளை கொள்வனவு செய்யும் அரசாங்க செலவிலிருந்து ரூபா 68,686,000 தொகை சேமிக்கக் கூடியதாக இருந்த சந்தர்ப்பத்தை இழந்திருந்தது.

**(ஆ) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கீழ் காணப்படும் மகளிர் பணியகத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் இது தொடர்பாக குறிப்பிட்ட பிரதேச செயலகங்களின் மூலம் விசாரணை செய்த போது பல்வேறு விடயங்களினால் இந்தக் கடன் தொகையை நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விதவைகள் மற்றும் குடும்பத் தலைவியின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தின் கீழ் 06 பிரதேச செயலகங்களில் 2010 முதல் 2022 வரையான காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட 05 கடன் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 1,208,212 தொகை ஒன்று அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது.

அறவிடுதல் செய்வதற்கு தாமதம் அடைந்ததெனவும், தற்போது குறிப்பிட் உத்தியோகத்தர்களை அறிவுருத்தி இந்தக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன்.

**(இ) கிராமியப் பொருளாதார பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சில் இருந்து பெறல்**

(i) கிராமியப் பொருளாதார பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் அம்பாறை மாவட்ட செயலகத்தின் மூலம் பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நலன் பெறுவோர் இரண்டு கட்டங்களின் கீழ் ஆடு வளர்ப்பு செயற்திட்டம் ரூபா 6,197,323 இற்கான செலவொன்றுடன் செயற்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவ்வாறு வழங்கியிருந்த ஆடுகளில் முதலாம் கட்டத்தில் ரூபா 194,000 தொகை பெறுமதியான 09 ஆடுகளும் இரண்டாவது கட்டத்தின் கீழ் ரூபா 215,115 தொகை பெறுமதியான 09 ஆடுகள் ஆக ரூபா 409,115 பெறுமதியான ஆடுகள் இறந்துள்ளன. இறந்துள்ள ஆடுகள் உரிய பாரத்தில் காணப்படாமையும், குறிப்பிட்ட சுற்றிக்கையின் படி நலன்பெறுவோருக்கு ஆடு வளர்ப்பு தொடர்பாக பயிர்ச்சியொன்று வழங்கப்படாமையும் பிரதேச செயலகங்கள் மற்றும் குறிப்பிட்ட நிறுவன மட்டத்தில் இந்த செயற்திட்டம் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு தீர்மானத்தின் படி மிருகங்களை காப்புறுதி செய்தல் நலன் பெறுவோரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். செயற்திட்டத்திற்காக நலன் பெறுவோரை தெரிவு செய்தல் மற்றும் தொடர் மேற்பார்வை அலுவலகள் வலயம் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், நலன் பெறுவோரின் மூலம் காப்புறுதி பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ள வேண்டும் என. அத் திணைக்களத்திற்கு அறிவுருத்தப்பட்டது. மேலும், விலங்குகளை கொள்வனவு செய்வதற்கு முன்னர் மிருக வைத்தியர்கள் அடங்கிய குழு ஒன்றினால் சுகாதார நிலைமை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் ஏற்பட்ட காலநிலை மாற்ற நிலைமையின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஆடுகள் மற்றும் மாடுகள் இறத்தல் நேரிட்டிருந்ததென அறிவிக்கின்றேன்.

செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது குறிப்பிட்ட அனைத்து நலன் பெறுவோருக்கும் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கக் கூடியவாறு செயற்படுத்துவதற்கும் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்பார்வை பலவீனமாக இருத்தல் இதற்கான காரணமாக இருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், நலன் பெறுவோருக்கு வழங்கப்பட்ட ஆடுகளுக்காக காப்புறுதி உள்ளடக்கம் பெற்றிருக்காமை காரணமாக இந்த இறந்த ஆடுகளுக்காக குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு வேறு மாற்று நலன் ஒன்று கிடைத்திருக்காமையால் செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) கிராமியப் பொருளாதார பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் அம்பாறை மாவட்ட செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட கிராமிய பொருளாதார பயிர்களின் பயிர் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உழுந்து/ பயறு பயிர்கள் பயிர் செய்யும் செயற்திட்டத்திற்காக (BG – Black Gram / GG – Green Gram – 2022) தொடர்பாக அம்பாறை மாட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளில் 1073 நலன் பெறுவோர்களுக்கு ரூபா 6,195,575 இற்கான பெறுமதியுடைய பயறு விதைகள் 5926.5 கி.கி. வினியோகிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி அந்த பயறு விதைகள் 2022 ஆண்டு ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆரம்பிக்கும் மூன்றாவது காலாண்டில் பயிர் செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட விதைகள் விவசாயிகளுக்கு 2022 திசெம்பர் மாதம் அளவில் வழங்கப்பட்டிருந்தமையால்

இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்துவது தொடர்பாக மாவட்ட விவசாயப் பணிப்பாளரை அறியப்படுத்திய போது அம்பாறை மாவட்டத்தில் 2022 சிறுபோக விவசாய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும், செப்தம்பர் மற்றும் திசெம்பர் காலப் பகுதியில் மழை பெய்தமையும், அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்த முடியாமல் போனமையும் ஆகிய காரணங்களினால் எதிர்பார்த்த காலப் பகுதியுள் நலன்கள் கிடைத்திருக்கவில்லை என அறிவிப்பதுடன், எவ்வாறாயினும் குறிப்பிட்ட விதைகள் நலன்பெறுவோருக்கு வினியோகிக்கப்பட்டுள்ளதெனவும், மேலும் அறிவிக்கின்றேன்.

செயற்திட்டங்கள் எதிர்பார்த்த காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த காலத்தில் விவசாயிகளுக்கு நலன்கள் கிடைத்திருக்கவில்லை அவதானிக்கப்பட்டது.

**(இ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட இரண்டு இலட்சம் (200,000) சமுர்த்தி குடும்பங்களை மையமாக கொண்ட முழுமையான வீட்டுப் பொருளாதாரமொன்றை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆண்டின் போது சமுர்த்தி நலன் பெறுவோருக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,840,680 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, கிழக்கு மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் 2022 நவம்பர் 16 திகதி மற்றும் 2023 ஜனவரி 31 திகதி ஆகிய திகதிகளில் கோழிக் குஞ்சுகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.
எவ்வாறாயினும், கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டு 03 மாத காலத்தினுள் ரூபா 822,420 பெறுமதியான 942 கோழிக் குஞ்சுகள் இறந்திருந்தன. இந்த இறந்த கோழிக் குஞ்சுகளுக்கு பதிலாக கணக்காய்வுத் திகதி வரை வேறு கோழிக் குஞ்சுகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காத காரணத்தினால் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த சுமார் ரூபா 822,420 தொகைக்கான நலன்கள் குறிப்பிட்ட சமுர்த்தி நலன் பெறுவோருக்கு கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

2022/11/16 திகதி முதல் சுற்றில் பெற்றிருந்த கோழிக் குஞ்சுகளில் 510 இறந்திருந்தது. அது தொடர்பாக கிழக்கு மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதி வரை சாதகமாக பதில் ஏதும் கிடைத்திருக்காமையால் அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.

செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது உரிய அனைத்து நலன் பெறுவோருக்கும் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கக் கூடியவாறு செயற்படுத்துவதற்கும் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி, நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமையினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டின் பகுதி ஒன்றென எமது அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அங்கு வருடாந்த கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி தயாரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களின் படி செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றதெனவும், அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படுகின்றன எனவும் அறிவிக்கின்றேன். | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | **அவதானிப்புக்கள்** | | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | | |
| | | **ரூபா.** | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | | |
| | (i) XIX அத்தியாயத்தின் பிரிவுகள் 5 மற்றும் 5:1 | 437,475 | மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 06 அரசாங்க வீடுகளில் வசிப்பவர்களிடம் நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 வீடுகள் தொடர்பாக வாடகை செலுத்தப்படுவதுடன் 04 வீடுகள் தொடர்பாக நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபனக் கோவையின் படி நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) XXIV அத்தியாயத்தின் பிரிவு 4 | 1,687,862 | அரசாங்க உத்தியேகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்றின் படி சேவை இடை நிறுத்தப்பட்ட, சேவையை விட்டுச் சென்றுள்ள, இறந்த மற்றும் ஓய்வு பெற்ற 14 உத்தியோகத்தர்களிடம் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரையான கால வீச்சில் நிலுவை கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 5 உத்தியோத்தர்கள் தொடர்பாக ரூபா 351,270 தொகையொன்று இது வரை தீர்த்திருந்ததுடன், 09 உத்தியோகத்தர் தொடர்பாக ரூபா 1,687,862 தொகையொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவையின் படி நிலுவை கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **பொது நிருவாகச் சுற்றறிக்கை** | | | | |
| | பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2009 | 5,191,174 | நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர சம்பளம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் ஆகிய வழமையான கடமை | தற்போது விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி குறிப்பிட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஏப்ரல் 16 திகதிய மற்றும் 2009/09 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 2.iv | நேரத்தின் பின்னர் செலுத்தப்படும் படிகளுக்காக காலத்தை அடிப்படையாகக் கொள்ளும் போது அந்தக் காலம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மஹஓய, அம்பாறை மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்களினால் 2022 ஆண்டிற்கான அவ்வாறு விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்தாத 141 உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர சம்பளம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |

**2.6 வைப்பு மீதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 11,944,076 இற்கான பெறுமதியை உடைய 02 வகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள இந்த வைப்புக்கள் தொடர்பாக இந்த ஆண்டின் போது நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க 571(2) நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், மாவட்ட செயலகத்தினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் படி எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதியதலாவ பிரதேச செயலகத்தினால் கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டம் - 2022 கீழ் ஹெலகோமான கொரமதயாலந்த பாதை, சுமனசார வித்தியாலய பாதை மற்றும் பலதுருவெல்ல கபுதெனியகல பாதை ஆகிய 03 பாதைகளை கொங்கிரீட் பண்ணுவதற்காக கூட்டுத்தொகை ரூபா 1,747,571 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த 3 பாதைகளை கொங்கிரீட் பண்ணுவதற்குரிய மதிப்பீட்டில் 07 ஆம் இலக்க விடயத்தின் படி குறிப்பிட்ட பாதைகளின் மேற்பகுதி தார் இடப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தத்தை பெற்றிருந்த சமூக அமைப்பினால் குறிப்பிட்ட கருமத்தை நிறைவேற்றியிருக்காமையால் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 65,520 இற்கான தொகை வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 31 திகதி அளவிலும் குறிப்பிட்ட கருமத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரை வாய்மொழி மூலம் அறிவுருத்தியிருந்ததுடன், அவரினால் தடுத்து வைத்தல் பணம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் விரைவாக அந்த வேலைப் பகுதியை பூர்த்தி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்த வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2016 (RIDP) கீழ் பதியதலாவ பிரதேச செயலகத்தினால் மொரதெனிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீர்ச் செயற்திட்டத்திற்காக கிணரொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகை ஏற்பாடுகள் | இந்த தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு வழங்கப்பட்ட பின்னர் அவர்களின் இயந்திரமொன்று செயற்படாமையால் தாமதம் அடைந்திருந்ததெனவும், அதனை சரி செய்தவுடன் | செயற்திட்டங்கள் குறிப்பிட்டட காலப் பகுதியுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு 2016 ஆண்டில் ரூபா 944,233 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தச் செயற்திட்டம் வெற்றியளிக்காத காரணத்தினால் 2021 ஒக்தோபர் மாதம் 31 திகதி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையிலிருந்து அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை அறவீடு செய்த பின்னர் ரூபா 510,250 இற்கான தொகையொன்று பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், பிரதேச செயலகத்தினால் அந்தத் தொகையை வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அதன்படி, செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்று 07 வருட காலம் கழிந்திருந்ததுடன், செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன், இந்த கருமத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 433,983 இற்கான தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | பூர்த்தி செய்யப்படும் என எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கிழக்கு மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் மீன் பிடி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் விநியோகித்தல் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட நிலைபேறான பாரம்பரிய சேதன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தமன மற்றும் உஹன பிரதேச செயலகப் பிரிவுகளில் பாரிய அளவிலான சேதனப் பசளை உற்பத்திக்காக 2021 ஆண்டின் போது மூன்று நலன் பெறுவோருக்கு ரூபா 1,500,000 இற்கான ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 31 திகதி அளவிலும் குறிப்பிட்ட செயற்திட்டம் செயற்படாமையால் ஏற்பாட்டுத்தொகை வைப்புக் கணக்கொன்றிற்று உட்படுத்தப்பட்டிருந்தது. | தமன பிரிவில் குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு பதிலாக வேறொரு நலன் பெறுவோரை தெரிவு செய்வதற்காக மாவட்ட செயலகத்திலிருந்து அனுமதிக்காக விண்ணப்பித்த போதிலும் அதற்கான அனுமதி கிடைக்காமையால் ரூபா 500,000 இற்கான தொகையொன்றும், உஹன பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நலன் பெறுவோர் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு இணங்காமையின் காரணத்தினால் ரூபா 1,000,000 இற்கான தொகையொன்றும் வைப்புக் கணக்கில் காணப்படுவதுடன், அந்தப் | செயற்திட்டத்திற்குரிய ஏற்பாடுகள் முழுமையாக பயன்படுத்தக் கூடியவாறு குறிப்பிட்ட காலப் பகுதியுள் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பணம் செலவு செய்யப்படாமல் காணப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த மீதித் தொகை கிழக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | |

### 3.4 செயற்திட்டம் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2021 திசெம்பர் 15 திகதிய மற்றும் MF/NPD 02/2021 இலக்கம் கொண்ட கிராமத்துடன் கலந்துரையாடல் - 2022 சுற்றறிக்கையின் பிரிவு 3.3 இன் படி அனைத்து செயற்திட்ட பிரேரணைகளும் ஆண்டின் போது செயற்படுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், பதியதலாவ பிரதேச செயலகத்தின் கீழ் 42 செயற்திட்டங்களுக்குரிய 190 நலன் பெறுவோருக்கு வினியோகிக்கப்பட வேண்டிய ரூபா 6,558,253 இற்கான பெறுமதியை உடைய பண்டங்கள் வினியோகிக்கப்படாமல் 2023 ஏப்ரல் 04 திகதி அளவிலும் பிரதேச செயலகத்தில் களஞ்சியப்படுத்தி காணப்பட்டதுடன், தமன பிரதேச செயலகத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட ரூபா 270,000 தொகை பெறுமதியான இரண்டு செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பண்டங்களை வினியோகிக்கும் அலுவல்கள் தயார் செய்யப்பட்டிருந்ததுடன், உள்ளூராட்சி தேர்தல் வெளியிடப்பட்டமையால் அதனை இடைநிறுத்துவதற்கு நேரிடப்பட்டதெனவும், தேர்தல் அறிவித்தல் ஒத்திவைக்கப்பட்ட போதிலும் தேர்தல் இரத்துச் செய்யப்படாமையால் இந்தப் பண்டங்களை வினியோகம் மேற்கொள்ள முடியாமல் போனதெனவும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பண்டங்களை வினியோகிப்பதற்கு அங்கீகாரம் மற்றும் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக உதவித் தேர்தல் ஆணையாளரிடம் வினவப்பட்டுள்ளதுடன், பதில் கிடைத்த பின்னர் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட காலப் பகுதியுள் செயற்திட்டங்களை செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று கடந்த 21 ஆண்டுகளுக்கு மிகையான காலம் | இந்த அலுவலகத்திற்குரிய லொறி வண்டி 21 வருட காலம் கராஜில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், இந்த | பயன்படுத்த முடியாத வாகனங்களை விரைவாக அப்புறப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | முதல் திருத்த வேலை மேற்கொள்வதற்காக கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கபட்டிருந்த போதிலும் அதன் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு அல்லது அதனை திருப்ப பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனத்தின் உரிமை அப்போது புனர்வாழ்வுத் திணைக்களத்திற்கு உரிமையாக காணப்பட்டதனால் உரிமையினை மாவட்ட செயலாளருக்கு மாற்றுவதற்குத் தேவையான ஆவணங்கள் திறைசேரியின் கொம்ட்ரோலர் ஜெனரால் இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த லொறி வண்டி சிதைவடைந்த நிலைமையில் காணப்பட்டமையால் இழுத்து வருவதற்கு இயலாமை மற்றும் வேறொரு வண்டியில் ஏற்றி வருவதற்கும் பாரிய செலவொன்று மேற்கொள்ள நேரிடுவதனால் லொறி வண்டியை அதே இடத்தில் வைத்து ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென கருணையுடன் அறிவிக்கின்றேன். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் 2019 ஆண்டு முதல் 2023 மே மாதம் வரை 28 மோட்டார் சைக்கிள்கள் ஓட்டத்திற்கு பயன்படுத்தப்படாமையால் 03 வருடங்களை விட மிகையான காலம் களஞ்சிய தொடர் கட்டிடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் போது உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் படி ஓட்டத்திற்கு தகைமையுடைய 10 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், ஓட்டத்திற்கு தகைமையில்லாத 05 மோட்டார் சைக்கிள்கள் ஹாடி தொழில்நுட்ப நிலையத்தின் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக (Auto-Mobile Course) வழங்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் ஏதேனும் அரச நிறுவனம் ஒன்றினால் அல்லது உத்தியோத்தர் ஒருவரினால் விண்ணப்பிக்கப்பட்டால் பொருத்தமான நிலைமையில் காணப்படும் மோட்டார் சைக்கிள்கள் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இந்த மோட்டார் சைக்கிள்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சமூக சேவைத் திணைக்களத்தினால் மஹஓய பிரதேச செயலகத்திற்கு வழங்கியிருந்த நீர் பவுசர் 2013 ஆண்டு முதல் சுமார் 10 வருட காலம் பயன்படுத்தப்படாமல் பிரதேச செயலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2023 பெப்ரவரி 17 திகதி அளவிலும் | பவுசரின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக பல வருட காலத்திற்கு முன்னர் விண்ணப்பிக்கப்பட்டதுடன், அந்தப்பணம் கிடைக்கப் பெறாமையால் தற்போது திருத்த வேலைக்காக பாரிய | இந்த வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த வாகனத்தின் திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அவ்வாறன்றேல் அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு நடவடிக்கை ஒன்று எடுத்திருக்கவில்லை. | தொகையொன்று செலவிட நேரிடுவதனால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. அப்புறப்படுத்தல் அலுவல்களுக்காக தேவையான நடவடிக்கைகள் மாவட்ட செயலகத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | மஹஓய பிரதேச செயலக பிரிவில் காணப்படும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் தன்னார்வ அமைப்பொன்றிற்கு வழங்கியிருந்த இரண்டு இலை துருவி இயந்திரங்கள், டிரக்டர் ஒன்று மற்றும் டேலர் ஒன்று அந்த தன்னார்வ அமைப்பில் காணப்பட்ட சச்சரவின் காரணமாக 2012 ஆண்டின் மஹஓய பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 பெப்ரவரி 17 திகதி வரை அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்காததுடன், குறிப்பிட்ட வாகனங்கள் தற்போது பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | இந்தப் பிரிவின் அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலம் தன்னார்வ அமைப்பொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு இலை துருவி இயந்திரங்கள், டிரக்டர் ஒன்று மற்றும் டேலர் ஒன்று இந்த அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த இயந்திரங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின் படி மேற்கொள்வேன். | குறிப்பிட்ட தன்னார்வ அமைப்புடன் கலந்துரையாடி அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் 2015 செப்தம்பர் 21 திகதி கள்வர்களினால் உடைத்து ஏற்படுத்திய நட்டம் ரூபா 850,738 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 மே 09 திகதி அளவிலும் தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக மேலதிக மாவட்ட செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அதன் விசாரணை அலுவல்கள் தற்போது நடைபெற்று வருகின்றது எனவும் குழுவின் அறிக்கை கிடைத்தவுடனே அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நேரிட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு அல்லது வேறேதும் உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மஹஓய பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டி 2020 ஆகஸ்ட் மாதம் 14 திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்தின் காரணமாக வாகனத்தின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 1,286,062 தொகையாக காணப்பட்டதுடன், காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 552,543 தொகையாகும். நிதிப் பிரமாணம் 104(4) இற்கு இணங்க சமர்ப்பித்திருந்த இறுதி அறிக்கையின் படி காப்புறுதி நிறுவனத்தில் உள்ளடக்கப்படாத நட்டம் வாகனத்தின் சாரதியிடம் இருந்து அறவீடு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் வாகனத்தின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் மூலம் அறவீடு செய்ய முடியாத தொகையாகிய ரூபா 773,517 தொகை அம்பாறை மாவட்ட செயலத்தினால் செலுத்தப்பட்டு 2023 மார்ச் 25 திகதி குறிப்பிட்ட வாகனம் கராஜிலிருந்து மீண்டும் பெற்றிருந்த போதிலும், 2023 மே 01 திகதி அளவிலும் அரச நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்த நட்டத்தை குறிப்பிட்ட சாரதியிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கப் வண்டிக்காக வழங்கப்பட்ட காப்புறுதி தவணைப்பணம் தற்போது மாவட்ட செயலகத்திற்கு வழங்கியிருந்ததுடன், காப்புறுதி உள்ளடக்கத்தில் அடங்கப்படாத தொகை சாரதியிடம் அறவீடு செய்யும் அடிப்படையில் மாவட்ட செயலத்தினால் குறிப்பிட்ட பணத்தை செலுத்தி கப் வண்டியை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காப்புறுதி உள்ளடக்கத்தினால் உள்ளடங்கப்படாத தொகை சாரதியினால் மாதாந்தம் ரூபா 5,000 வீதம் செலுத்துவதற்கு விண்ணப்பித்திருந்ததுடன், அது தொடர்பாக ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக பொது நிருவாக உள்நாட்டு விவகார மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | அரசிற்கு நேரிட்டுள்ள நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவை வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் | 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த பிரஜைகள் மற்றும் சேவை நாடுனர் சாசனம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும், எதிர்காலத்தில் அதனை | சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த பிரஜைகள் மற்றும் சேவை நாடுனர் சாசனம் தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிமுகப்படுத்தியிருந்தவாறு பிரஜைகள்/ சேவை நாடுனர் சாசனத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அம்பாறை மாவட்டச் செயலகம் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உள்ளவாறான பதவியணி** | | |
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 2363 தொகையும், உள்ளவாறான பதவியணி எண்ணிக்கை 2721 தொகையாக காணப்பட்டமையால் பதவியணியில் காணப்படும் 116 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 474 பேரைக் கொண்ட மிகைப் பதவியணியினை முறைப்பிரகாரம் அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சு மட்டத்தில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்த மாவட்டத்திற்கு இணைக்கப்படுவதனால் சுட்டிக் காட்டப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மிகைத்துள்ளதென அறிவிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணியை முறைப்பிரகாரம் அங்கீகரித்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது நிருவாக செயலாளரின் இலக்கம் 02/2018 கொண்ட மற்றும் 2018 ஜனவரி 24 திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒட்டுமொத்த பதவியணிக்குமாக மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது மனித வள திட்டமொன்று தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் படி மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டு ஒட்டுமொத்த பதவியணிக்குமாக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி உச்சமட்ட சேவைக் காலம் அனைத்து சேவை நிலையங்களிலும் 05 வருடங்கள் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையமொன்றில் கடமையாற்றுவதற்காக வசதி செய்யும் முகமாக இடமாற்றம் வழங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மாவட்ட செயலகத்தில் | 2022 ஆண்டின் போது இடமாற்றம் வழங்கும் போது 05 வருடங்களுக்கு மிகையான காலம் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன், முன்வரும் ஆண்டுகளின் போது இடமாற்றம் வழங்கப்படும் போது கூடிய காலம் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, முறைப் | சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட காலத்தில் இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கடமையாற்றும் 27 உத்தியோகத்தர்கள் 06 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையான காலம் ஒரே நிலையத்தில் கடமையாற்றிய போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் வேறு சேவை நிலையங்களுக்கு இடைமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

பிரகாரம் 05 வருடங்களுக்கு மிகையான சேவைக் காலத்தை உடைய உத்தியோகத்தர்களின் நிருவாக சிக்கல்கள் ஏற்படாதவாறு இடமாற்றும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.